## கூடுதல் சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு. எம்.கே.மாயக்கிருஷ்ணன், பி.பி.ஏ., பி.எல்.,

கூடுதல் சார்பு நீதிபதி (முழுகூடுதல் பொறுப்பு)

மயிலாடுதுறை.

வா.சா.1 நாள்:- 19.12.2023

| O.S. No. | 462/2020 | | |
|---|---|---|---|
| பெயர் | எண்ணரசு | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது :-

வாதி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி :-

நான் இவ்வழக்கின் வாதி. இத்துடன் தாக்கல் நிரூபண வாக்குமூலமாக சாட்சியம் அளிக்கிறேன். அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 27.06.2012 தேதியிட்ட செட்டில்மென்ட் பத்திரம் சார் பதிவக சான்று நகல் (கணினி நகல்) **வா.சா.ஆ.1.** (வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் ஆவணம் அசல் தாக்கல் செய்யப்படாததாலும், அது மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றும் குறிப்பிட்டு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபணை பதிவு செய்து குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தின் சாட்சியத்தன்மை குறித்து தீர்ப்பு சமயத்தில், தீர்மானிக்க முடிவு செய்யப்படுகிறது). 14.11.2019 தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு கணினி தரவிறக்க நகல் **வா.சா.ஆ.2.** 02.12.2019 தேதியில் பிரதிவாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.3.** பிரதிவாதி பெயரிலுள்ள மின் கட்டண அட்டை அசல் **வா.சா.ஆ.4.**

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

,இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- எம்.கே.மாயக்கிருஷ்ணன்,
கூடுதல் சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை (பொறுப்பு)

ASJ (FAC), MAYILADUTHURAI